

உத்தமர் காந்தியடிகளின் நினைவு நாளான தியாகிகள் நாளையொட்டி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.1.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியின்போது, உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், துறைச் செயலாளர்கள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கோ-ஆப் டெக்ஸ் ஊழியர்களுக்கு 15 சதவிகித ஊதிய உயர்வு!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, ஜன.31-

கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்களுக்கு 15 சதவிகிதம் வரை ஊதிய உயர்வு அறிவித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் கைத்தறி, துணிநூல் துறை கட்டுப்பாட்டில் இயங்கும் கோ-ஆப்டெக்ஸ் இந்திய அளவில் முன்னணி கைத்தறி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மற்றும் வெளிமாநிலங்களில் 150 கிளைகளுடன் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்களுக்கு 15 சதவீத ஊதிய உயர்வு அளித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்களுக்கு 15 சதவிகிதம் வரை ஊதிய உயர்வு அறிவிக்கப்படுவதாகவும், கோ-ஆப்டெக்ஸில் அலுவலக உதவியாளர் முதல் தலைமை பொது மேலாளர் வரை 10 நிலைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கோஆப்டெக்ஸ் ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படி மற்றும் நகர ஈட்டுப்படியை உயர்த்தியும் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

### பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள

# நெல்லை வருகை தரும் முதல்வருக்கு பிரமாண்ட வரவேற்பளித்திடுவோம்!

## நெல்லை மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!



நெல்லை.ஜன.31-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வருகிற பிப்ரவரி 06.02.2025,07.02.2025 ஆகிய இரண்டு நாட்கள் நெல்லை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள்.அதற்கான முன்னேற்பாடுகள்,பணிகள் குறித்து நெல்லை கிழக்கு மற்றும் மத்திய மாவட்ட தி.மு.க.சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பாளை கே.டி.சி.நகர் மாதா மாளிகையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பிப்ரவரி 6 மற்றும் 7ஆம் தேதிகளில் நெல்லை மாவட்டம் வருகை தருவதை முன்னிட்டு நெல்லை கிழக்கு மற்றும் மத்திய மாவட்ட தி.மு.க.சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பாளை கே.டி.சி.நகர் மாதா மாளிகையில் மாவட்ட அவை தலைவர்கள் ம.கிரகாம்பெல்,வி.கே.முருகன் ஆகியோர் தலைமையில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப்,மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி பேசியதாவது.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் ஒவ்வொரு முறையும் மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போதும் நலத்திட்ட உதவிகள் வழங்குவது மட்டும் அல்லாது. கட்சியின் மூத்த முன்னோடிகள், தொண்டர்களை சந்தித்து குறைநிறைகளை கேட்டறிந்து நிவர்த்தி செய்வதால்தான் தி.மு.க.இன்று மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது.

**ரூ.6400 கோடியில் வளர்ச்சிப் பணிகள்!**

நெல்லை மாவட்டத்திற்கு அடுத்த மாதம் 6 மற்றும் 7 ந்தேதி முதல்வர் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ரூ.6400 கோடி மதிப்பில் வளர்ச்சித் திட்டப் பணிகளை துவக்கி வைக்கிறார்கள்.6 ம் தேதி பிற்பகலில் கங்கை கொண்டானில் 350 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள டாடாசோலார் பேனல் நிறுவனத்தை தொடங்கி வைக்கிறார்கள். இங்கு 3000 பேர் உள்ளூர் மக்கள் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர், என்பது குறிப்பிடத் தக்கது.

மேலும் ரூ.1600 கோடியில் பல்வேறு திட்டப்பணிகளை தொடங்கி வைக்கும் முதல்வர் அவர்கள் மாலையில் பாளையங்கோட்டை சந்தையை திறந்து வைக்கிறார்கள். தொடர்ந்து நேருஜி கலையரங்கில் கழக நிர்வாகிகள், தொண்டர்களை சந்திக்கிறார்.இந்த நிகழ்வைத் தொடர்ந்து நூற்றாண்டு மண்டபத்தில் மாற்று கட்சியைச் சேர்ந்த 1000 பேர் கழகத்தில் இணைகின்றனர்.

**40 ஆயிரம் பேருக்கு வீட்டுமனைப் பட்டா!**

மறுநாள் 7 ந்தேதி காலை முதலமைச்சர் அவர்கள் மாஞ்சோலை தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள், மீனவர்களை சந்திக்கிறார்கள்.பின்னர் அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று 40 ஆயிரம் பேருக்கு வீட்டு மனை பட்டா வழங்கப்படுகிறது. இது பட்டா வழங்க முடிவு எடுக்காமல் இருந்ததாகும். இதில் 20,200 பேர்கள் முதல்வர் அவர்களிடம் நேரடியாக பட்டா பெறுகின்றனர்.

நெல்லை வரும் முதல்வர் கழகத் தலைவர் அவர்களை மாவட்ட செயலாளர்கள் ஆவுடையப்பன், மைதீன் கான் ஆகியோர் கூறியது போல் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டு உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும்.

**நெல்லை தி.மு.க.வின் கோட்டை!**

தலைவர் அவர்கள் குமரி செல்லும் போது கொடுத்த வரவேற்பை விட, அதாவது அதைவிட சிறப்பான வரவேற்பு கொடுக்க வேண்டும். நெல்லையில் நாம் வென்று விட்டோம் என்று தலைவர் அவர்கள் சொல்லும் அளவிற்கு நாம் பணியாற்ற வேண்டும். இந்த இரண்டு நாட்கள் சுற்றுப்பயண மாக வரும் முதல்வர் அவர்கள் நமது பிரமாண்ட வரவேற்பு மற்றும் செயல்பாடுகளை பார்த்து நெல்லை மாவட்டத்தில் உள்ள 5 தொகுதிகளையும் வென்று எடுத்து விட்டோம் என்ற நம்பிக்கையுடனும்,மகிழ்ச்சியுடனும் செல்லவேண்டும். நெல்லை மாவட்டம் தி.மு.க.வின் கோட்டை என்று சொல்லும் அளவிற்கு நாம் பணியாற்ற வேண்டும். தமிழகத்தை சிறப்பான வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்வோம்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சா.ஞானதிரவியம், ஆ.பிரபாகரன்,ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், சித்திக், பேச்சிப்பாண்டியன், மாநில தேர்தல் பணி செயலாளர் ராஜம் ஜான், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா,மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன்,மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் ராஜவர்மன்,மீனவரணி துணை செயலாளர் எரிக் ஜுடு,மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயகுமார், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச்செல்வி, நாங்குநேரி தொகுதி பார்வையாளர் சுரேஷ் ராஜன், இராதாபுரம் தொகுதி பார்வையாளர் சிவராஜ், அம்பை தொகுதி பார்வையாளர் ஜோசப்ராஜ், மாநில சட்டத்துறை துணைச் செயலாளர் ராஜா முகம்மது,மாவட்ட பொருளாளர்கள் ஜார்ஜ் கோசல், வண்ணை சேகர்,பூக்கடை அண்ணாதுரை,மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன்,சுரேஷ், கிரிஜாகுமார், நம்பி,மைக்கேல்,தமயந்தி, அப்துல் கையூம்,சுதா மூர்த்தி, மூலிகுளம் பிரபு, பொதுக்குழு உறுப்பினர்கள் ராமச்சந்திரன்,சாந்தி சுபாஷ், பரமசிவஐயப்பன், கனகராஜ், நடராஜன்,பி.எம்.சரவணன், மேயர் கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ்,ஒன்றிய செயலாளர்கள் தங்கப்பாண்டியன், போர்வெல் கணேசன்,வேலங்குளம் கண்ணன், சுடலைக்கண்ணு, ஆரோக்கிய எட்வின், வி.எஸ்.ஆர். ஜெகதீஸ், ஜோசப்பெல்சி, பி.சி. ராஜன், செல்வகருணாநிதி, பரணி சேகர் முத்து கிருஷ்ணன், முத்துப்பாண்டி என்ற பிரபு, மாரியப்பன், அருள்மணி, அன்பழகன், நகர செயலாளர்கள் கணேசன்,கே.கே.சி.பிரபாகரன், மணி சூரியன்,பகுதி செயலாளர்கள் சுப்பிர மணியன் (தச்சை) அன்டன் செல்லதுரை(பாளை) துபாய் சாகுல் (மேலப்பாளையம்) அணி அமைப்பாளர்கள் ஜான்ரபீந்தர், அலெக்ஸ் அப்பாவு, செல்வசூடாமணி,

காமினி தேவன்,கல்லூர் பாலா, கருப்பசாமி கோட்டையப்பன், வில்சன் மணித்துரை, நவநீதன், பொன்னையா பாண்டியன், மல்லிகா அருண், பிரேமா, நெடுஞ்செழியன், தவசி மணிகண்டன், ராஜா சங்கரலிங்கம்,மாடசாமி, பிரேம் ஆனந்த், மகேஸ்வரி, அனிதா,சௌந்தரம் முத்துராஜ், இசக்கி பாண்டி, சிறுபான்மை நலப்பிரிவு நவ்ஷாத்,கருப்பசாமி செல்வம்,மண்டலத் தலைவர்கள் பிரான்சிஸ், ரேவதி, கதீஜா இக்லாம் பாசிலா, தகவல் தொழில் நுட்ப அணி காசிமணி, பொறியாளர் அணி சாய் பாபா, மேலச்செவல் ஊராட்சி மன்ற தலைவர் அன்னபூரணி,அணி துணை அமைப்பாளர்கள் மீரான் மைதீன்,அலிப் மீரான், தவசிராஜன்,வீரபாண்டியன்,

மிக்கேல்,மாமன்ற உறுப்பினர்கள் ஜூலியட் மேரி,ரம்ஜான்அலி,டாக்டர் சங்கர்,உலகநாதன்,கந்தன்,மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாலமோன் டேவிட், அருண் தவசு பாண்டியன்,முன்னாள் பொருளாளர் அருண் குமார் உள்பட பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டனர்.

### நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட - சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அறிவிப்புகளின்

# அனைத்துப் பணிகளும் இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடையும்!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்

சென்னை, ஜன. 31 -

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று முன்தினம் (29-01-2025) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராசன் மாளிகையில் உள்ள சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் 2023-2024 மற்றும் 2024-2025ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்தும், அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைக்கும் திட்டங்கள் குறித்தும், நிறைவு பெற்ற திட்டங்களை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது குறித்தும் விரிவான ஆய்வுக்கூட்டம்நடைபெற்றது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 2023-2024 மற்றும் 2024 - 2025 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட 96 அறிவிப்புகளில் 9 பணிகள் நிறைவடைந்தும் மற்ற அனைத்து பணிகளும் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன, அனைத்துப் பணிகளும் வரும் டிசம்பர் 2025க்குள் முடிவடையும்.

குறிப்பாக பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் என 25 பணிகளும், பேருந்து நிலையங்கள் மற்றும் போக்குவரத்து மேம்பாடு என 18 பணிகளும், சமுதாய நலக்கூடங்கள் என 13 பணிகளும், நீர் நிலை மேம்பாடு மற்றும் கட்டமைப்பு என 12 பணிகளும், பள்ளிகள் மற்றும் பிற கல்வி மேம்பாடு என 5 பணிகளும், சந்தை மேம்பாடு என 8 பணிகளும், புனர் வாழ்வு மையங்கள் அமைத்தல் என 3 பணிகளும், கொள்கை ரீதியான 3 திட்டங்கள் என மொத்தம் 87 பணிகள் என அனைத்துப் பணிகளும் வரும் டிசம்பர் 2025க்குள் முடிவடையும்.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அ.பாலசுப்ரமணியன், ந.ரவிக்குமார், தலைமை நிர்வாக அலுவலர்கள் திருமதி. மு.இந்துமதி, டாக்டர் பிரின்சிலி ராஜ்குமார், கண்காணிப்பு பொறியாளர் ராஜமகேஷ்குமார், செயற்பொறியாளர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கோவை மாநகர் மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா நினைவு நாள் அமைதிப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!



கோவை, ஜன.31-

கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சி தந்த காவியத் தலைவர், உலகத்தமிழர் உள்ளங்களில் எல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் செந்தமிழ் காவலர், தமிழ்மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர்

“இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்று நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்.

தான் மறைந்தாலும் தனது புகழ் எப்போதும் நிலைத்திருக்குமாறு செய்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 56 ஆவது நினைவு நாளான 03.02.2025, திங்கட்கிழமை அன்று, காலை 8.00 மணியளவில், தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி. செந்தில்பாலாஜி வழிகாட்டுதலில்,

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில், கோவை சித்தாபுதூர் வி.கே.கே.மேனன் சாலையில் இருந்து அமைதி ஊர்வலம் புறப்பட்டுச் சென்று, கோவை காந்திபுரத்தில் உள்ள, பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. அதுசமயம், இந்நிகழ்வில், கோவை மாநகர் மாவட்ட திமுக நிர்வாகிகள், கோவை நாடாளுமன்ற உறுப்பினர்,தலைமைக் கழக நிர்வாகிகள், மேயர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,பகுதிச் செயலாளர்கள், வட்டக்கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக்கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள், BLA 2 பாக முகவர்கள், கழகத் தொண்டர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### கிழக்கு கடற்கரை சாலையில் நடந்த சம்பவம் தொடர்பாக

# குற்றவாளிகளைக் கைது செய்ய விரைந்து நடவடிக்கை!

## தாம்பரம் மாநகர காவல்துறை விளக்கம்!

சென்னை, ஜன. 31 -

ஈ.சி.ஆர். சாலையில் ஒரு காரில் சென்ற பெண்களை வேறொரு காரில் சென்ற ஆண் நபர்கள் துரத்திச் சென்று தொல்லை கொடுத்ததாக சில சேனல்களில் வந்த செய்திக்கு விளக்கம் வருமாறு

கடந்த 26.01.2025 அன்று செல்வி சின்னி திலங் என்ற பெண் கானத்தூர் காவல் நிலையத்தில் ஆஜராகி 25.01.2025 அன்று நள்ளிரவு சுமார் 02.00 மணி அளவில் தான் (TN 13S5466) என்ற காரில் முட்டுக்காடு பாலம் அருகே வந்த போது இரண்டு கார்களில் (TN 75E6004, TN09BR9988) வந்த 78 நபர்கள் திடீரென வழி மறித்துள்ளனர்.

அங்கு நிற்காமல் தனது வீட்டிற்குச் சென்ற செல்வி சின்னி திலங் என்பவரை இரண்டு கார்களில் வந்த நபர்கள் துரத்திச் சென்று கானத்தூரில் உள்ள அவரது வீட்டருகே நிறுத்தி பிரச்சனை செய்து அவர்களது காரை செல்வி சின்னி திலங் என்பவர் கார் இடித்து விட்டு நிற்காமல் சென்றதாக கூறி உள்ளார்கள்.

மேலும் மேற்படி காரை இடித்துவிட்டு நிற்காமல் சென்றதற்காக செல்வி சின்னி திலங் என்பவர் வந்த காரை துரத்தியதாகவும் அந்த பிரச்சனையை தீர்த்து வைப்பதற்காக வந்ததாக கூறியதை செல்வி சின்னி திலங் தரப்பு மறுத்துள்ளது.

மேற்படி புகாரின் பேரில் கானத்தூர் காவல்நிலைய மனு ரசீது எண் 22/2025 நாள் 26.01.2025 வழங்கப்பட்டு, விசாரணை மேற்கொண்டு தொடர்ந்து கானத்தூர் காவல் நிலைய குற்ற எண். 16/2025 u/s 126(2), 296(b), 324(2), 351(2) BNS r/w 4 of TNPHW Act பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. மேற்படி குற்றவாளிகளை விரைந்து கைது செய்யவும் குற்றவாளிகள் பயன்படுத்திய கார்களை பறிமுதல் செய்யவும் அதன் தொடர்சியான ஈ.சி. ஆர். சாலையில் உள்ள சி.சி.டி.வி. காட்சிகளை ஆய்வு செய்து துரித புலன்விசாரணை செய்ய மூன்று தனிப்படைகள் அமைக்கப்பட்டு புலன்விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.



வேலூர் கொண வட்டம் அரசு மேல் நிலைப்பள்ளியில் மாணவ – மாணவிகளுக்குஇலவச மிதிவண்டிகளை மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ வழங்கினார். அருகில் மாநகராட்சி மேயர் சுஜாதாஆனந்தகுமார், பகுதி செயலாளர் வி.ஜி.கே.சுந்தரவிஜி, மாமன்ற உறுப்பினர் கா.சு.சண்முகம், கொணவட்டம் வட்ட கழகசெயலாளர் ஆனந்தகுமார், மாநகர சிறுபான்மையினர் உரிமைப் பிரிவு அமைப்பாளர் இம்தியாஸ், துணை அமைப்பாளர் காலப்பா, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வெங்கலம் ஊராட்சிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம் ஆதிதிராவிடர் நல சமுதாய கூடத்தில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட “மக்களுடன் முதல்வர்” சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் கிரேஸ் பச்சாவ் தலைமையில் நேற்று முன்தினம் (29.1.2025) தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் மற்றும் பலர் உள்ளனர்.